

FREE EDITION

July – 2018

# ஜோதி

Jothi Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 05 - 137

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

"ஓம் சக்தியே
ஓம் பங்காரு அடிகளே போற்றி ஓம்"

**ஆன்மிககுரு**
**அருள்திரு அம்மாவை வேண்டும்**
**குரு பூரணை தினம்**
(குரு பூர்ணிமா)
12ஆவது வருட
**அனுஷ்டிப்பு**

குருவிற்கு பாதபூஜை

ஒரு இலட்சம் தடவை குரு மந்திரம் ஓதுதல்

கூட்டு வழிபாடு

**27.07.2018**
மாலை 6.00மணி

Melaleuca Activity Hub
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

Guru Purnima is a Hindu festival dedicated to spiritual and academic teachers. This festival traditionally celebrated by Hindus and Buddhists, to thank their teachers. It is marked by ritualistic respect to the Guru, Guru Puja. The Guru Principle is a thousand times more active on the day of Gurupournima than on any other day,
.
Melmaruvathur Swayambu
Arulmihu Adhiparsakthi
Vaara Valipaattu Mandram(2193)
Clayton – Dandenong
Australia

# மின் சக்தியும் ஓம் சக்தியும்

**தெ**ன்காசி ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்துக்கும், அங்குள்ள விநாயகர் கோயிலுக்கும் தினமும் சென்று வழிபடுவது என் வழக்கம். வெள்ளிக்கிழமை தோறும் கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளத் தவறுவது இல்லை.

இந்தப் புத்தாண்டு காலத்தில் என் வாழ்விலும், என் கணவர் வாழ்விலும் நம் அன்னை எத்தனையோ அற்புதங்களையும் சித்தாடல்களையும் நடத்தியிருக்கிறாள். நாங்கள் வெளியிடுவதில்லை. ஒன்றை மட்டும் வெளியிட விரும்புகிறேன்.

நானும் என் கணவரும் தென்காசி கூட்டுறவு அச்சகத்திலே பணி புரிந்து வருகிறோம். என் தம்பியும் அவன் மனைவியும் அவர்களின் ஒரு வயதுக் குழந்தையும் எங்களோடு குடும்பத்தில் இருக்கிறார்கள்.

காலை 9 மணிக்கு நானும் என் கணவரும் அலுவலகம் புறப்பட்டு விடுவோம். என் தம்பி காலை 8 மணிக்குக் கடைக்குச் சென்று விடுவான். என் தம்பி மனைவியும் குழந்தையும் வீட்டில்தான் இருப்பார்கள். இவ்வளவு ஒற்றுமையாக இவர்கள் குடும்பம் இருக்கிறதே என்று ஊர் மெச்சும்படி இருந்தது எங்கள் குடும்பம். கண் திருஷ்டியோ என்னவோ..? 26.04.1995 அன்றுதான் அந்த விபத்து நடந்தது.

**சக்தி கோமதி - தென்காசி**

நானும் என் கணவரும் மாலை ஆறு மணிக்குத்தான் அலுவல் முடிந்து வீட்டிற்கு வருவோம். என் தம்பியும் கடையைப் பூட்டிக்கொண்டு இரவுதான் வருவான்.

வீட்டில் நாங்கள் யாரும் இருப்பதில்லையாதலால் என் தம்பி மனைவி வீட்டின் முன்புறம் மற்றும் பின்புறக் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டுதான் வீட்டு வேலை பார்ப்பாள்.

26.04.1995 அன்று மாலை 5..30 மணி இருக்கும். என் தம்பியின் குழந்தை டி.வி. ஸ்டாண்ட் ஆட்டி ஆட்டி அதனுடன் பொருத்தப்பட்ட கன்வெர்ட்டர், டி.வி.க்கு உள்ள பிளக் எல்லாவற்றையும் கீழே இழுத்துப் போட்டுவிட்டான். கீழே இழுத்துப்போட்ட ஸ்விட்ச் போர்ட்டை குழந்தை கையில் எடுத்தபோது இரண்டு கையிலும் ஷாக் அடித்திருக்கிறது. கடுமையான வலி தாளாமல் குழந்தை வீறிட்டு அழுதிருக்கிறான்.

இதனை உணராத அவன் தாய் கீழே விழுந்து அடிபட்டு அழுகிறான் என்று எண்ணி இரண்டு அடி கொடுத்துத் தொட்டிலில் தூக்கிப் படுக்க வைத்துவிட்டாள்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**"பத்துப் பெண்களும் பத்து குழந்தைகளும் ஒரு இடத்தில் கூடியிருந்தால் அங்கே ஆன்மிகம் பற்றிப் பேசு"**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

Search by: "Jothi Sudar"

## செய்திச்சுடரில்...


மின் சக்தியும் ஓம் சக்தியும்
Page: 1 – 3

பகுத்தறிவுக்கு அப்பால்..
Page: 6 - 7

UPCOMING EVENTS
Melbourne: 13, 15
Sydney: 8, 10

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 5

உனது நூலுக்குப் பலம் கொடுத்துவிட்டேன்
பக்கம்: 4

Divine Miracles
Page:8

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 12

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16


## மின் சக்தியும் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மணி 5.40 ஆகிவிட்டதே என்றெண்ணி பிளக்கை எடுத்து டி.வி.யில் மாட்டி விடலாம் என்று தொட்டிருக்கிறாள். அது கையோடு ஒட்டிக்கொண்டுவிட்டது. அது மட்டுமில்லாமல் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்துவிட்டது.

மின்சாரம் ஐந்து நிமிடங்களில் உடம்பில் பாதி, ஒருபக்க முகம், கை கால் எல்லாம் கோணலாகி அந்த இடத்தை விட்டே நகர முடியாமல் ஆகிவிட்டது.

இவ்வளவு ஆபத்துக்கிடையிலும் ஒரு தைரிய உணர்ச்சி ஏற்பட்டு "ஐயோ! காப்பாற்றுங்கள்! என் குழந்தையைக் காப்பாற்றுங்கள்!" என்று உரக்கக் கதறியிருக்கிறாள். அன்று பார்த்து அக்கம்பக்கத்தில் யாரும் இல்லை. இவள் போட்ட சப்தம் யாருக்கும் கேட்க வாய்ப்பில்லை. இவள் சப்தம் போட்ட இடத்துக்கும் தெருவுக்கும் கிட்டத்தட்ட ஐம்பதடி இருக்கும். எனவே சப்தம் கேட்டு உதவிக்கு யாரும் வர வாய்ப்பேதுமில்லை.

அந்த நேரம் பார்த்து அந்தத் தெரு நடையில் சுமார் 50 வயது இருக்கும் ஒரு முஸ்லிம் பெண்மணி வந்து அமர்ந்திருக்கிறாள்.

"காப்பாற்றுங்கள்.. காப்பாற்றுங்கள்.." என்று வீட்டிலிருந்து வந்த அலறலைக் கேட்டுப் பக்கத்துக் கடைக்குச் சென்று "ஐயா.. இந்த வீட்டில் புருஷன் மனைவிக்குள் ஏதோ தகராறு நடக்கிறது. அவன் குடித்துவிட்டுப் பெண்டாட்டியை அடிக்கிறான் போலிருக்கிறது. அந்தப் பெண் உள்ளிருந்து காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கதறுகிறாள். போய்ப் பாருங்கள்!" என்று கூறியிருக்கிறார்.

"அட போம்மா! அந்த வீட்டிலே போய்ச் சண்டை நடப்பதாவது! எவ்வளவு ஒற்றுமையான குடும்பம் அது. குழந்தையை வைத்து ஓடிப் பிடித்து விளையாடுவார்கள்" என்று கூறிவிட்டு அமைதியானார் பக்கத்துக் கடைக்காரர்.

"அப்படியா..?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் அதே அடத்தில் வந்து அமர்ந்துகொண்டார் அந்த முஸ்லிம் பெண்மணி.

அமர்ந்த மறுநிமிடமே மீண்டும் உள்ளிருந்து அலறல் சப்தம் அதிகமாகி விட்டது. மீண்டும் பக்கத்துக் கடைக்காரரிடம் ஓடி வந்தார் அந்தப் பெண்மணி.

"ஐயா.. விளையாட்டாக எண்ண வேண்டாம். தயவுசெய்து எனக்காகவாவது வந்து பாருங்கள்.." என்று கெஞ்சினார்.

கடைக்காரரும் என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாமே என்று ஆர்வத்தில் தெரு வாசல் திறந்து ஜன்னல் வழியாகப் பார்த்தபோது அவருக்கு ஒரே அதிர்ச்சி..!

"அம்மாடி..! கரண்டில் மாட்டிக் கொண்டல்லவா கதறுகிறாள்!" என்று கூறியபடி அவசர அவசரமாக கதவைத் தட்டினார். உள்ளே தாழிடப்பட்டதால் பின்புறக் கதவருகே ஓடியிருக்கிறார். அதுவும் தாழிடப்பட்டிருந்தது. பின்னர் கதவை உடைத்து உள்ளே நுழைந்திருக்கிறார்கள்.

அங்கே அவள் உடம்பு முழுவதும் மின்சாரம் பாய்ந்து ஆளே மாறிவிட்டாள்.

"தாத்தா..! அந்த மெயின் சுவிட்சை ஆ∴ப் பண்ணுங்கள்.." என்றார் அந்தப் பெண்மணி.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)

# மின் சக்தியும் . . .

(2ஆம் பக்க தொடர்ச்சி)

சுவிட்சை ஆ.ஃ.ப் பண்ணிய பிறகும் அவள் கையிலிருந்த பிளக் கீழே விழவில்லை. அதற்குள் கையில் பாதி வெந்து புகைய ஆரம்பித்துவிட்டது.

“என்னம்மா இது? மெயின் ஆ.ஃ.ப் செய்தும் உன் கையிலிருந்து பிளக் விடவில்லையே..!” என்றார் கடைக்காரர்.

“என்னைத் தூக்கி விடுங்கள்” என்று கேட்டிருக்கிறாள் என் தம்பி மனைவி. அவளைத் தொட முயன்றபோது கடைக்காரருக்கும் ஷாக் அடித்தது. எனவே பின் வாங்கிவிட்டார்.

அதற்குள் வேறு இரண்டு ஆட்கள் வந்து சேர்ந்துவிட்டனர். ஒரு பெரிய மரக்கட்டையைக் கொண்டு அந்த பிளக்கை அடித்து எடுக்க முயற்சி பண்ணியும் எடுக்க முடியவில்லை. அதன் பின் வலது கையில் ஒரு கட்டையைக் கொடுத்து அதைக் கெட்டியாகப் பிடிக்கவும், இடக்கையிலிருந்து பிளக் தானாகக் கீழே விழுந்துவிட்டது. அது கீழே விழுந்த மறுநிமிடமே கோணியிருந்த கை கால் எல்லாம் சரியாகி விட்டது. இடது உள்ளங்கை மூன்று விரல்களும் ரணமாகிவிட்டன.

இவ்வளவு அசம்பாவிதங்களுக்கும் இடையே நடந்த ஓர் அற்புதம் என்னவென்றால் அந்தக் குழந்தை ஒரு நிமிடம் கூடத் தொட்டிலில் இருக்கமாட்டாள். சதா துறுதுறுவென்று இருப்பவன் அவன். சற்று அவன் இறங்கி வந்து தாய் அருகே சென்றிருந்தால் தரை முழுதும் பாய்ந்திருந்த மின்சாரம் குழந்தைக்கும் பாய்ந்திருக்கும். தாயைத் தொட்டிருந்தாலும் ஷாக் அடித்திருக்கும். இவ்வளவு களேபரங்கட்கும் இடையில் அந்த வாண்டுப்பயல் சிலை போலவே தொட்டிலில் உட்கார்ந்திருந்தது மிகப் பெரிய அற்புதம்! இத்தனை சம்பவங்களும் முடிந்த பிறகு அந்த முஸ்லிம் பெண்மணியைத் தேடியிருக்கிறார்கள். ஆனால் அவரைக் காணவில்லை. தக்க சமயத்தில் அவர் எங்கிருந்து வந்தார்? ஏன் வந்தார்? எப்படி மறைந்து போனார்? யாருக்கும் தெரியவில்லை.

## எல்லாமே புதிராக இருந்தன

ஏதோ ஒரு கர்மவினை! மின்சார விபத்து என்கிற ரூபத்தில் வந்தது. அதிலிருந்து காப்பாற்றவே என் தாய் - என் தெய்வம் கருணையோடு வீடு தேடி வந்திருக்கிறாள். கடைக்காரரைத் துணை வைத்துக்கொண்டு காப்பாற்றி விட்டு மறைந்திருக்கிறாள். இதை எண்ணி ஒவ்வொரு நிமிடமும் பரவசம் அடைகிறேன்.

“அந்த அம்மா என்ன சும்மாவா? தினம் தினம் ஆதிபராசக்தியைக் கும்பிடுகிறது. பௌர்ணமி தோறும் என்னவோ கலச பூஜையாம்! அந்தப் பூசையும் செய்கிறது. நவராத்திரிக்கு 9 நாள் கொலு வைத்துப் பூசை செய்கிறது. அதனால்தான் அந்த ஆதிபராசக்தியே நேரில் வந்து காப்பாற்றி இருக்கிறது. பாரேன்… அந்தம்மா ஆபீஸ் போயிருந்த நேரத்திலும் தாயையும் குழந்தையையும் காப்பாற்றி இருக்கிறது” என்பது ஊர் மக்கள் பேச்சாக இருந்தது.

என்னதான் வீட்டில் வைத்து அம்மாவை வழிபட்டாலும் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்வதால் நம் ஊழ்வினைகள் தணிகின்றன. எனவே மன்ற வழிபாட்டில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு அன்னையின் அருளைப்பெற வேண்டும். அதுவே என் மேலான விருப்பம்.

**ஆசிரியர் குறிப்பு**

“அறிவாளி கண்டது மின்சக்தி. அடி முட்டாள் கண்டது ஓம் சக்தி” என்று நாத்திகர்கள் கேலி பேசுகின்றனர். அறிவாளி கண்ட மின்சக்தியால் உயிர் ஆபத்து வந்தபோது அடி முட்டாள் கண்ட ஓம் சக்தி எப்படியெல்லாம் காப்பாற்றியிருக்கிறது என்பதை அம்மா பக்தர்கள் தங்கள் அனுபவத்திலிருந்தே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

நீர், நெருப்பு, மின்சாரம் ஆகியவற்றில் மிக எச்சரிக்கையாகவும் கண்ணும் கருத்துமாகவும் இருக்க வேண்டும் என்று அன்னை இந்த ஆண்டு பலனில் கூறியிருக்கிறாள்.

> “ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்”
> - என்கிறார் வள்ளுவர்.

**‘ஊழ்வினை வலிது. அதனைத் தவிர்க்கவும், வெல்லவும் இறைவழிபாடே சிறந்த வழி. அந்த வழிபாட்டுப் பழக்கம் இல்லாதவர்க்குத் திருவருள் துணை வராது’ என்பது அருளாளர் கருத்து.**

**திருவருள் பக்தனை மட்டுமின்றி அவனைச் சார்ந்தவர்களையும் காக்கும்.**

ஓம் சக்தி!

# உனது நூலுக்குப் பலம் கொடுத்துவிட்டேன்!

கோவை பாரதிநகரில் வசித்து வரும் பெண்மணி திருமதி. ராஜமணி. கணவர் பாலசுப்பிரமணியம். கை நிறையப் பணம் இருந்தும், வீடு கட்ட நிலம் இருந்தும், வாடகை வீட்டில் அல்லலபட்டுக்கொண்டு வசித்து வந்தார்கள். வீடு கட்டும் முயற்சிக்குத் தடங்கல்கள் வந்தபடியே இருந்தன.இதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள திருமதி ராஜமணி ஒரு சோதிடரை நாடிச் சென்றார். “அம்மா! நீங்கள் வீடு கட்ட ஆரம்பித்தால் உங்கள் கணவருக்கு ஆபத்து வரும். அந்த முயற்சியில் இறங்க வேண்டாம்” என்று சோதிடர் எச்சரித்தார். எல்லா வசதியிருந்தும், சொந்தமாக ஒரு வீடு இல்லையே என்ற கவலை திருமதி ராஜமனியை அரித்தெடுத்தது. வாடகை வீட்டில் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறதே.. எனச் சஞ்சலப்பட்டார்.

ஒருமுறை அப்பகுதியில் உள்ள ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். மேல்மருவத்தூர் அம்மனிடம் வேண்டிக்கொண்டார் மனக்குறை தீரும் என்று சொன்னார்கள். அதுகேட்டு அந்த மன்றத்துக்கு வந்தார். வழிபாட்டில் கலந்து கொண்டார். தன் பிரச்சனை குறித்து மன்றப் பொறுப்பாளர்களிடம் கூறினார். “நீங்கள் ஒருமுறை மேல்மருவத்தூர் சென்று அம்மாவிடம் அருள்வாக்கு கேளுங்கள்” என்றார்கள் பொறுப்பாளர்கள்.

அவ்வாறே மேல்மருவத்தூர் வந்தார். அன்னையின் அருள்வாக்கு கேட்டார். “மதுரையில் ஆன்மிக மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது. அதில் கலந்து கொண்டு வேள்விப்பணியில் தொண்டு செய்! அங்கே கலசங்களுக்கு நூல் சுற்று!” என்றாள் அன்னை.

**திருமதி. கோமதி சுந்தரம்**
கோவை

அந்தப் பெண்மணி வெளியே வந்து “என்ன .இது..? நான் ஒரு குறையை நீக்கப் பரிகாரம் கேட்டால் ஆன்மிக மாநாட்டில் கலந்து கொண்டு வேள்விக் கலசங்களுக்கு நூல் சுற்றும்படி இந்த சாமி சொல்கிறாரே..!” என்று குழம்பினார் திருமதி ராஜாமணி.

செவ்வாடைத் தொண்டர்கள் சிலரிடம் இது குறித்து விளக்கம் கேட்டார். “உங்கள் பிரச்சனைக்கு அதுதான் தீர்வு. அதுதான் பரிகாரம்! அம்மா சொன்னபடிச் செய்யுங்கள்” என்றார்கள் தொண்டர்கள்.

மன்றப் பொறுப்பாளர்களிடம் அம்மா அருள்வாக்கில் சொல்லியதைக் கூறினார். அவர்கள் துணையோடு மதுரை ஆன்மிக மாநாட்டில் கலந்து கொண்டார். வேள்விக்கலசங்களுக்கு நூல் சுற்றுவது, மஞ்சள் குங்குமம் வைப்பது ஆகிய பணிகளைச் செய்தார்.

மாநாடு முடிந்து மீண்டும் அந்தப் பெண்மணி அன்னையிடம் வந்து அருள்வாக்கு கேட்டார்.

“மகளே! நீ உடனே வீடு கட்டத் தொடங்கு! உத்தரவு!” என்றாள் அன்னை.

“அம்மா! வீடு கட்ட முயன்றால் என் கணவர் உயிருக்கு ஆபத்து என்று அந்தச் சோதிடர் சொல்கிறாரே..?” என்று கேட்டார் அந்தப் பெண்மணி.

“மகளே! என்றைக்கு என் கலசத்துக்கு நீ நூல் சுற்றினாயோ அன்றைக்கே உன் நூலுக்குப் பலம் கொடுத்துவிட்டேன். பயப்படாமல் வீடு கட்டத் தொடங்கு! உன் கணவன் உயிருக்கு நான் பொறுப்பு!” என்றாள் அன்னை.

அதன்படி, அந்தப் பெண்மணி கோவை ராமனுஜ நகரில் தனக்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டி முடித்தார். தன் இரு மகன்களுக்குத் திருமணமும் செய்து வைத்துப் பேரன் பேத்திகளோடும், கணவரோடும் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்.

**வேள்வித் தொண்டில் ஒரு கலசத்துக்கு நூல் சுற்ற வைத்தும், ஒரு பெண்மணிக்கு மாங்கல்ய பலம்தந்தாள் அன்னை.**

**நம் பெண்கள் அன்னை அருளிய வேள்விப்பூசை முறைகளைக் கற்றுக் கொண்டு, அவ்வப்போது வேள்வித் தொண்டுகளில் ஈடுபடுவதோடு, தம் குடும்பத்துச் சடங்குகளையும் செய்வதற்குத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.**

ஓம் சக்தி!



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

நான் ஒரு தனியார் பள்ளி ஆசிரியை. அம்மாவின் அருளால் 6 வயதில் எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் தவமிருந்து பெற்ற குழந்தை என்பதால், அவள் தவறு செய்யும்போது அடிக்க மனம் வராது. ஆனால் அடித்து விடுவேன்., சூடு போட்டு விடுவேன் என்று பயமுறுத்திவிட்டு வேதனைப்படுவேன். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கவில்லை என்றால், கோபப்பட்டு அடித்துவிடுவேன். பிறகு, நமக்கே ஆண் வாரிசு இல்லை என்று தவிக்கும்போது இப்படி ஆண் பிள்ளைகளை அடிக்கின்றோமே.. எதற்கு வேலைக்குப் போகவேண்டும் என்று தோன்றுகிறது.. ஆசிரியர் பணி புனிதமானது என்றாலும் அடிப்பது? நான் செய்வது தவறா, நினைப்பது தவறா.. எனக்கு யோசனை சொல்லுங்கள் அம்மா…

தவம் செய்து பெற்ற குழந்தையாக இருந்தாலும், தவறு செய்யும்போது எடுத்துச் சொல்லித் திருத்த முயல வேண்டும். ஆறு வயதுப் பெண் குழந்தை என்கிறீர்கள். சொல்லியும் திருந்தாத அளவுக்கு அது ஒன்றும் திரும்பத் திரும்பப் பெரிய தவறைச் செய்துவிடாது. உங்களுக்குத்தான் முன்கோபம் வரும் என்று நினைக்கிறேன். கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். எடுத்தவுடன் அடித்து விடக்கூடாது. ஓரிரு முறை பொறுமையாகத் திருத்த முயற்சிக்கலாம். அடிக்கு மட்டுமே பயப்படும் குழந்தையாக இருந்தால், குறும்பு எல்லை மீறினால், லேசாக அடித்துப் பயமுறுத்தலாம். அடித்தாலும் பயம் போய்விடும். நீங்கள் ஆசிரியர் என்கிறீர்கள், மாணவர்கள் மீது அக்கறையோடு நன்றாகப் போதிக்கும் ஆசிரியராக இருந்தால் மாணவர்களை அடித்துத் திருத்துவதில் தவறு இல்லை. இந்தக் காலத்து மாணவர்கள் மிகவும் அறிவுக்கூர்மை உள்ளவர்கள். பார்த்து நடந்து கொள்ள வேண்டும். நன்கொடை கொடுக்காத மாணவனை ஆக்ஸைடை எடுத்து குடித்துச் சாகச் சொன்ன ஆசிரியர்களும் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள். கூடிய மட்டும் மாணவர்களிடம் அன்பாக நடந்து கொண்டு தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்துவதில் தவறு இல்லை. கொடுமையான தண்டனைகளைக் கொடுக்கக் கூடாது. உங்களுக்கு ஆண் வாரிசு இல்லை என்ற குறைதான் இப்படியெல்லாம் உங்களைச் சிந்திக்க வைக்கிறது. வாழ்க்கையில் ஆண் வாரிசு இல்லாதது பெரிய பாவம் இல்லை. குழந்தையே இல்லாதவர்கள் உலகில் பலர் இருக்கும்போது, ஒரு பெண் குழந்தை இருப்பதைப் புண்ணியமாக நினைக்க வேண்டும். பெற்றது பெண் குழந்தையானாலும் பேணி வளர்த்தால் ஆண் பிள்ளைக்குச் சமமாக வருவார்கள். பெண்ணுக்கு ஆறு வயது தானே ஆகிறது? ஆண் வாரிசு கிடைக்க வேண்டுமானால் அம்மாவை வேண்டிக் கொள்ளுங்கள்..

□□□

## ஆன்மாதான் சரி செய்யும்

“நெஞ்சில் முள் குத்தியிருந்தால் சாப்பிட முடியாது. உறுத்திக்கொண்டே இருக்கும். அதுபோல மனத்தில் ஒரு தீய எண்ணம் இருந்தால் மனத்தை உறுத்திக்கொண்டே இருக்கும். ஆன்மாதான் அதைச்சரி செய்ய முடியும்.”

## ஆன்மா சொல்வதை உடனே செய்து விடு!

“பணக்காரன் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாது. ஒளி இல்லாவிட்டால் உன் நிழல் கூட உன்னை விட்டு ஒதுங்கி விடும். உன் செல்வம் எதற்கும் உதவாது! இதைக் கேள்! இதைச் செய்! என்று ஆன்மா சொல்வதைச் செய்துவிட வேண்டும்”

அன்னையின் அருள்வாக்கு

## அருள்வாக்கும் அனுபவங்களும்:

# பகுத்தறிவுக்கு அப்பால்...

சென்னை - தி.நகர் மன்றத்தில் அடிக்கடி வந்து வழிபட்டுச் செல்கிற ஆடிட்டர் ஒருவர். அவருக்கு ஒரு மகன். எம்.பி.பி.எஸ். படித்து இறுதியாண்டுத் தேர்வுக்காகத் தயார் செய்துகொண்டு வந்தார். எல்லா ஆண்டுத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்ற அவர், இறுதியாண்டுத் தேர்வை மட்டும் எழுத முடியாமல் தவித்தார். அவர் படிப்பில் மந்தமானவரா...? என்றால் அதுதானில்லை. அப்புறம் என்ன? என்று கேட்கத் தோன்றும்.

தேர்வுக்கூட்டத்திற்குச் செல்கிறபோது மட்டும் அந்த மாணவருக்கு இனம்புரியாத குழப்பமும், அச்சமும், பீதியும் ஏற்படும். தேர்வுக் கூட்டத்திற்குள் நுழையவே முடியாதபடி ஏதோவொன்று அந்த மாணவரைத் தடையிட்டுத் தடுத்து வந்தது.

ஓராண்டா...இரண்டாண்டா..? இப்படிப் பத்தாண்டுகளாக எம்.பி.பி.எஸ். இறுதியாண்டுத் தேர்வை எழுத முடியாதபடி தடையேற்பட்டு வந்தது.

ஒவ்வொரு ஆண்டும் நன்றாகத்தான் படித்து வந்தார். தேர்வுக்குத் தயார் செய்வார். தேர்வெழுதும் அறைக்குள் நுழைகிறபோது மட்டும் அந்தத் தைரியமும், நம்பிக்கையும் காணாமல் போய்விடும். அச்சமும், குழப்பமும் ஏற்படும். அந்த மாணவர் மனநோயாளியா? அப்படியும் சொல்லிவிட முடியாது.

“தைரியமாகப் போ! உனக்குத் தெரிந்ததை எழுது! தேர்வுக்கூடத்தில் உட்கார்ந்துவிட்டாவது வா” என்று அந்த மாணவரின் தந்தை தைரியம் சொல்லி அனுப்புவார். ஆனாலும் தேர்வுக்கூடத்திற்குச் செல்கிற முன்பு இருந்த தைரியம், தன்னம்பிக்கை, தேர்வுக்கூடத்தை நெருங்கியதும் காணாமற் போய்விடும்.

மூன்றே மூன்று பாடங்கள் மட்டும்தான் பாக்கி. (1.மெடிக்கல், 2.சர்ஜரி, 3. கைனோகாலஜி) அவற்றை முடித்துவிட்டால் எம்.பி.பி.எஸ். பட்டம் கிடைத்துவிடும்.

அந்த மாணவர் மனநோயாளியுமில்லை. தாழ்வு மனப்பான்மை கொண்டவருமில்லை.

அவரை ஒரு டாக்டராக உருவாக்க எண்ணிய பெற்றோர்கள் மனம் சோர்ந்துவிட்டார்கள்.

தேர்வுக்கு முதல்நாளும், தேர்வு முடிந்துபோன மறுநாளும் இருக்கிற மனத்தெளிவு தொடங்குகிற அந்த நாளில் மட்டும் இல்லாமற் போவதேன்?

இது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பிரச்சனையாக இருந்தது. அவ்வளவே சொல்ல முடியும். அந்த மாணவரை அழைத்துக்கொண்டு பெற்றோர் அன்னையிடம் அருள்வாக்கு கேட்க வந்தார்கள்.

“கொஞ்சம் பொறுத்திரு மகனே! உனக்கு மருத்துவப்படிப்பு உண்டு. நேரம் வரும்பொழுது அதை உனக்குத் தருகிறேன்” என்றாள் அன்னை.

“நேரம் வரும்போது..” என்று அம்மா குறிப்பிட்டதால் அதில் ஏதோவொரு புதிர் அடங்கிக் கிடக்கிறது. அது அம்மாவிற்குத் தெரியும். அந்தத் தடை நீங்க நேரம் வர வேண்டும் என்று அம்மா சொல்வதால், பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்றுதான் என் படிப்பிற்குத் தடையாக உள்ளதென்று அந்த மாணவரால் புரிந்துகொள்ள முடிந்தது.

வருடங்கள் ஓடின. பலருடைய கேலிப்பேச்சுக்களுக்கும், கிண்டல்களுக்கும் உள்ளானார் அந்த மாணவர். அதனால் மன உளைச்சலுக்கும் ஆளானார்.

ஒவ்வோராண்டும் தேர்வுக்குரிய கட்டணத்தை மட்டும் தவறாமல் செலுத்தியபடி இருந்தார். தேர்வு நாளன்று தேர்வு எழுதும் அறைக்குள் நுழைந்து எழுதிவிடத்தான் முடியவில்லை.

இதற்கிடையில் அன்னை அருள்வாக்கில் சொல்லிய பரிகாரங்கள் பலவற்றையும் இடைவிடாமல் செய்துகொண்டு வந்தார்.

ஒருமுறை அருள்வாக்கில் அன்னை கூறினாள். “மகனே! ஒன்பது முதல் பதினைந்து சக்தி மாலை இடைவிடாமல் போட்டுக்கொண்டுவா”.

பல சிரமங்களுக்கிடையே அன்னையின் ஆணையை நிறைவேற்றி முடித்தார்.

1995 ஜனவரி மாதம் 15ஆவது சக்திமாலையணிந்து இருமுடி செலுத்திவிட்டு அன்னையைத் தரிசிக்கச் சென்றார்.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)

# பகுத்தறிவுக்கு அப்பால்...

“28 பேருக்கு நீயே குருவாக இருந்து, உன் செலவில் சக்தி மாலை போட்டு இருமுடி எடுக்க வைத்து என் சந்நிதிக்கு அழைத்து வா!” என்று ஆணையிட்டாள் அன்னை.

அவ்வாறே செய்து முடித்தார்.

1995 ஏப்ரல் மாதம் அன்னையிடம் சென்றார்.

“இதுதான் உனக்குக் கடைசித் தடவை. இதைவிட்டால் உன்னால் படிக்க முடியாது. இந்த முறை போய்ப் பரீட்சை எழுது” என்று உத்தரவிட்டாள் அன்னை.

அந்த மாணவருக்கோ குழப்பம். தேர்வுக்கு இன்னும் மூன்று வாரங்களே இருந்தன. நம்மால் படிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. சரி! அம்மா சொல்லிவிட்டார்கள். நாம் நமது கடமையைச் செய்வோம் என்று படிக்க ஆரம்பித்தார்.

தேர்வுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது. இப்போது அந்த மாணவருக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அவர் நிலையுணர்ந்த பெற்றோர் மருவத்தூர் வந்து குரு தரிசனம் பெற்றபோது மகன் நிலைமை பற்றிக் கூறினார்கள்.

“அவனைச் சும்மா போய்ப் பரீட்சையில் உட்காரச் சொல்லுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று குருநாதர் அடிகளார் சொல்லியனுப்பி வைத்தார்கள்.

அன்னையின் ஆணைப்படியே அன்னையை நம்பித் தேர்வெழுத ஹாலுக்குள் நுழைந்தார். வழக்கமான பயம், குழப்பம் எதுவுமில்லை.

தேர்வுகள் எழுதினார். திருவருள் துணையால் தேர்வில் வெற்றியும் பெற்றார். அன்னையின் திருவருளை எண்ணி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

குடும்பத்தோடு மேல்மருவத்தூர் வந்தார். குருவைத் தரிசித்தார். ஆன்மிக குரு அடிகளார் சொன்னார்கள்.

“என்னப்பா..! இத்தனை வருடம் கழித்து நீ பரீட்சை எழுதி பாஸ் பண்ணிட்டியா? நீயா படிச்சி, நீயா எழுதி பாஸ் பண்ணிட்டோம்னு நினைச்சிக்காதே! அம்மா உன்கூட வந்ததப்பா! இது அம்மாவோட சித்தாடல்பா! அம்மாவோட சக்தியை இப்பப் புரிஞ்சுக்கோ! இன்னும் நீ மேற்படிப்பு படிக்கலாம்” எனக்கூறி ஆசி வழங்கினார்கள்.


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்

# Sydney - Mandrams - Upcoming Events – July 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 06.07.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

## Divine Miracles at Melmaruvathur

### In search of:

A young boy was employed with a retailer by name Nallusarma in a village near Hosur. The boy stayed there for 6 months and left without any notice. His parents came in search of him. All the people resorted to several measures to find him. The boy's parents filed a complaint against Nallusarma.

Nallusarma happened to read about Melmaruvathur Mother in the magazine Idayam Pesukirathu. He came to Maruvathur, did anga pradakshanam and was waiting for revelation. Mother said, "The object you are searching for has not changed its body (Koodu Azhiayavillai) I will take care".

He went back peacefully. But again surrendered to Mother after a month as the boy's parents were giving him a lot of trouble. Then Mother asked him to bring some soil from his house. Mother did some poojas and gave it back and askedhim to do Pooja for that every day. Within 4 months. The boy was found. Mother saved Nallusarma from such a danger.

***

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆனி – அமாவாசை–பௌர்ணமி :**

திருமணம் நடைபெறும்.
தடைப்பட்ட திருமணம் விரைவில் நடைபெறும்.

**ஆடி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆயுள் விருத்தி உண்டாகும்.
அனைத்து செல்வங்களும் சேரும்.

# வாகனமாய் வந்த அன்னை

30 வருடங்களாக நான் பிறப்பதற்கு முன்பே என் பெற்றோர்கள் அம்மாவின் பக்தர்கள். அம்மாவை தினம்தோறும் வழிபட்டு வருகிறார்கள். என் பெயரும் அம்மா அவர்கள்தான் வைத்தார்கள். என் பாட்டி ஆண் குழந்தை என்றால் சக்திபாலன் என்று முன்பாகவே முடிவு செய்து வைத்துள்ளார்கள். அம்மாவிடம் அருள்வாக்கு கேட்கும்போது என் தந்தை இரண்டாவதாகப் பிறந்துள்ள பையனுக்கு அம்மாதான் பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டபோது "நீ நினைத்த பெயரையே வை மகனே" எனக் கூறியுள்ளார்கள். மறுபடியும் கேட்டபோது, "அவனும் சக்தியின் பாலகன்தானே? அந்தப் பெயரையே வை" என்றார்களாம்.

வீட்டிற்கு வந்து சொன்னபோதுதான் என் பாட்டியும் அந்தப் பெயரைத்தான் தேர்வு செய்து உள்ளதாக சொன்னபோது எல்லோருக்கும் ஆச்சரியமாகிவிட்டது. அம்மாவின் அருளால் என் அண்ணனும் நானும் நல்ல வேளையில் உள்ளோம். 2012ஆம் ஆண்டு என் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம். அதற்கு முந்தைய வருடம் நவராத்திரியில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே இந்த வருடம் கண்டிப்பாகச் செல்ல வேண்டும் என முடிவு செய்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எழுந்து மருவத்தூருக்குப் புறப்பட்டேன்.

தாம்பரம் பேரூந்து நிலையத்தில் பஸ்ஸிசிற்காகக் காத்திருந்தேன். அப்போது காரில் வந்த ஒருவர் (செவ்வாடையுடன்) மேல்மருவத்தூர் செல்கிறீர்களா என்றார். ஆமாம் என்றவுடன் நானும் அங்குதான் செல்கிறேன். நீங்களும் எங்களோடு வாருங்கள் என்றார். நானும் வண்டியில் ஏறிக்கொண்டேன். அவரோடு அவர் மகன் இருந்தார். வண்டியில் செல்லும்போது அம்மாவின் மூலமந்திரம், 108 மந்திரங்கள் சொல்லிக்கொண்டு வந்தோம்.

**சக்தி சக்திபாலன்** - போரூர் - சென்னை

செங்கல்பட்டு அருகே (Toll Plaza) செல்லும்போது Toll Chargeஐ செலுத்த எண்ணி எனது மணிபர்சை எடுத்தேன். அப்போது நான் அதிர்ச்சி அடைந்தேன். காரணம் காலையில் வீட்டில் என் பெற்றோர்கள் உறங்கிக் கொண்டிருந்ததால் அவர்களை தொந்தரவு செய்யாமல் இருக்க எண்ணி விளக்கைப் போடாமல் இருட்டில் என்னுடைய பழைய பர்சை எடுத்து வந்துவிட்டேன். அதில் தேடியபோது வெறும் 22 ரூபாய்தான் இருந்தது. ஒருவேளை தாம்பரத்தில் நான் பேரூந்தில் ஏறி இருந்தால் காசு குறைவாக இருப்பதால் கண்டிப்பாக வீடு திரும்பி இருப்பேன்.

அம்மாவின் அருளால்தான் அம்மா ஒரு தொண்டர் மூலமாக நான் மருவூர் வர அருள் புரிந்தாள். நல்லபடியாக மருவூர் வந்து 10 ரூபாய்க்கு எண்ணெய் வாங்கி அகண்டத்தில் எண்ணெய் ஊற்றி அம்மாவை கண் குளிரத் தரிசித்தேன்.

மீதம் இருப்பது 13 ரூபாய். என்ன செய்வது என்று தெரியவில்லை. அங்கு ஒரு வண்டியில் நின்றிருந்த டிரைவரிடம் ஊருக்குச் செல்ல 5 ரூபாய் கேட்டேன். உடனே எடுத்துக் கொடுத்தார். காலையில் பால் கூட சாப்பிடாமல் கிளம்பிய எனக்கு ஆலயத்தில் அம்மாவின் பிரசாதம் சுடச்சுட கிடைத்தது. மருவூர் வரவேண்டும். அம்மாவைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பிய பிள்ளைக்கு அம்மா வாகனமாய் வந்து அழைத்துச் சென்றாள். எத்தனையோ பேர் செவ்வாடையுடன் பேரூந்து நிலையத்தில் நிற்கிறார்கள்.

எத்தனையோ பேர் கார்களில் மருவத்தூருக்கு வருகிறார்கள். எல்லோரும் அப்படியா அழைத்து வருகிறார்கள். அன்று அம்மா எனக்கு அருள் புரிந்தாள் என்பதே உண்மை. "தாயின் சந்நதிக்கு அடிக்கடி வருவதற்குக் கணக்குப் பார்க்காதே மகனே. கையில் காசில்லை என்றாலும் வாகனமாய் வந்து அழைத்து வருவேன்" என சக்தி ஒளியில் படித்திருக்கிறேன். அதை என் அனுபவத்தில் உணர்ந்தேன். எல்லோரும் அம்மாவின் அருளையும் ஆசியையும் உணர வேண்டும்.

ஓம் சக்தி!

## எதற்கும் வரம்பு தேவை:

**"சட்டம், ஒழுங்கு, கண்ணீர், தண்ணீர் என எல்லாவற்றுக்கும் ஓர் வரம்பு அவசியம். அந்த வரம்பு இல்லையென்றால் கொலை, களவு, அராஜகப் போக்குகள் அதிகமாகிவிடும்."**

- அன்னையின் அருள்வாக்கு


# Sydney - Mandrams - Upcoming Events – July 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**


Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 06.07.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

## குரு உபதேசங்கள்



### அம்மா மாபெரும் சக்தி

“அம்மா மாபெரும் சக்தி! இமயமலை மாதிரி! அதைத் தலையிலே தூக்கி வைத்திருக்க வேண்டி இருக்கிறது. உங்களையெல்லாம் (செவ்வாடைத் தொண்டர்கள்) பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கிறது. இனி நீங்களெல்லாம் செய்ய வேண்டியது என்ன?

தொண்டர் ஒருவர் பதில் சொன்னார்.

“குருவாகிய உங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியது தான்”.

### அம்மாவின் நிழல்

“அம்மாவிடம் எனக்கு நிழல் கிடைத்துவிட்டது. எனக்குக் கிடைத்த நிழல் உங்களுக்கும் கிடைக்க வேண்டும்.

இனி நான் அம்மாவின் கோவிலைச் சுற்றி வந்து கும்பிட வேண்டும் என்பதெல்லாம் தேவையில்லை. ஆனாலும் நான் ஏன் கோயிலைச் சுற்றுகிறேன்? உங்கட்காக..!

நீங்களெல்லாம் அம்மாவின் கோயிலை எப்படி வலம் வர வேண்டும்? எப்படிக் கும்பிட வேண்டும் என்பதையெல்லாம் உங்கட்கு உணர்த்துவதற்காக! என்னைத் தரிசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்கள் திருப்திக்காக!

நான் வலம் வரும்போது தரிசித்துக் கொண்டாலே போதும்! ஆனாலும் என்னிடம் நேரில் வந்து பேச வேண்டும். குறையைத் தெரிவிக்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கிறார்கள். அதற்கு அவசியமே இல்லை! அவர்கள் தரிசனத்துக்காகத்தான் நான் கோயிலைச் சுற்றுகிறேன், கற்பூரத்தட்டை ஏந்துகிறேன்.

என்னைத் தரிசித்து விட்டு, அப்படியே அம்மா எதிரில் தங்கள் குறையைத் தெரிவித்துவிட்டுச் சென்றாலே போதுமானது.”

# அன்னையின் படத்தில் அடிகளார்

மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தியிடம் ஈடுபாடு கொண்டு வழிபடுகின்ற பக்தர்கள் அனைவரும் சுயம்பு, அன்னையின் விக்கிரகம், அருள்திரு அடிகளார் ஆகிய மூன்று உருவங்களும் சேர்ந்த படத்தை வைத்தே வழிபட்டு வருகின்றனர். பயன் பெறுகின்றனர். வழிபாட்டு மன்றங்களிலும் இந்தப் படமே பூஜைக்கு உரிய படமாக அமைந்துள்ளது. அன்னையின் அருள் வேண்டி நடத்தப்படும் கலச விளக்கு, வேள்விப் பூஜைகளிலும் இந்தப் படமே முன் வைத்துப் பூஜை செய்யப்படுகிறது. விழாக்கால ஊர்வலங்களிலும் இந்தப் படமே பயன்படுத்தப்படுகிறது. அன்னை அருள்வாக்கு உத்தரவுப்படியே இந்தப் படம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதெல்லாம் புரியாமல் சிலபேர் நம் பக்தர்களையும், செவ்வாடைத் தொண்டர்களையும் ஆரம்ப காலத்தில் குழப்பி வந்தார்கள்.

ஆதிபராசக்தி படத்தில் உயிருள்ள மனிதர் ஒருவரை வைத்துக் கும்பிடலாமா? இது சரியா? முறையா? என்றெல்லாம் கேட்டுத் திசை திருப்பினார்கள்.

தொடக்க நாட்களில் அன்னையின் கோயில் கருவறையில் சுயம்பு மட்டுமே இருந்தது. அபிஷேகம், அர்ச்சனை முதலியன யாவும் சுயம்புவுக்கே நடத்தப்பட்டன.

அன்னையை வீட்டிலும் வைத்து வழிபாடு செய்வதற்கு ஒரு படம் வேண்டுமே என்று கருதிய, செங்கற்பட்டு வழக்கறிஞர் ஒருவர், அருள்வாக்கில் இது பற்றி அன்னையிடம் முறையிட்டார்.

பொறு மகனே! உரிய நேரம் வரும்போது நானே சொல்வேன் என்றாள் அன்னை.

சில மாதங்கள் கழித்து அன்னை உரிய படம் ஒன்றைச் சொன்னாள்.

“மகனே! சுயம்புவின் அருகில் இந்தப் பாலகனை (அடிகளார்) வைத்துப் படம் எடுக்க ஏற்பாடு செய்து கொள்! அவ்வாறு படம் எடுக்கும் முன்பு, பாலகனுக்கு நெற்றியில் திருநீற்றை பூச வைத்துப் படம் எடுத்துக்கொள்.

என் சந்நிதிக்கு வருபவர்களில் திருநீறே பூசாதவர்கள் இரண்டு பேர், அவர்களுள் பாலகன் ஒருவன் (அடிகளார்) மற்றொருவன் இதோ இருக்கிறானே.. இவன் என்று சொல்லிப் புலவர் சொக்கலிங்கத்தைக் காட்டினாள். அவ்வாறு சுட்டிக்காட்டி, இவன் கையாலேயே திருநீறு பூச வைத்துப் பாலகனைச் சுயம்பிற்கு அருகில் அமர வைத்துப் படம் எடுக்க ஏற்பாடு செய்து கொள்! என்னை வழிபட விரும்புகிற பக்தர்கட்கு இதுதான் படம்! என்று அருள்வாக்கில் கூறினாள்.

சுயம்பு அருகே அருள்திரு அடிகளார் இரண்டும் சேர்ந்த படம் தான் ஆரம்ப கால வழிபாட்டுப் படம்.

கருவறையில் விக்கிரகம் நிறுவப்பட்ட பிறகு, சுயம்பு, விக்கிரகம், அருள்திரு அடிகளார் என்ற மூன்றும் கொண்ட படத்தையே வழிபாட்டுக்குரிய படம் என்று கூறினாள்.

## புலவர் சொக்கலிங்கம் திருநீறு பூசாததற்குக் காரணம்

புலவர் சொக்கலிங்கம் திருநீறு பூசாததற்குக் காரணம் உண்டு.

புலவர் சொக்கலிங்கம் ஆரம்பத்தில் கடவுளை நம்பாதவர். பின்னர் சித்தர்களிடமும், யோக நெறியிலும் அவர்க்கு ஈடுபாடு வந்தது.

திருவலஞ்சுழி மகான் வள்ளல் பரஞ்சோதி, சாலை ஆண்டவர் ஆகியோரிடம் உபதேசம் பெற்றவர். தூய ஞான மார்க்கத்திலே அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. இப்படிக் குருவிடம் உபதேசம் பெற்றவர்கள் எந்தச் சமய சின்னங்களையும் தரிக்கக்கூடாது என்பது நிபந்தனையாம். அதனை மீறுவது குருவின் ஆணையை மீறுவது போலாகும் என்று கருதி அவர் திருநீறு பூசுவது இல்லை.

## அன்னையின் கேலி!

அவர் அன்னையிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்த பிறகும், அன்னையிடம் இரகசியமான ஆன்மிகச் செய்திகள் பலவற்றைக் கேட்டறிந்த பிறகும்கூட, குருவுக்கு அஞ்சினார். அவ்வாறு அஞ்சுவது நியாயம் என்று கருதினார். ஆகவே ஆலயத்தில் வழங்கப்பட்ட திருநீற்றுப் பிரசாதத்தை பூசுவதற்கும் பயம். கீழே கொட்டவும் பயம். என்ன செய்தார் தெரியுமா?

கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டார்., எஞ்சியதை மார்பில் தடவிக் கொண்டார்.

(தொடர்ச்சி…12ஆம் பக்கம்)

# அன்னையின் படத்தில். . .

அம்மா, ஒருநாள் இதுபற்றிக் கேலியாகக் கேட்டாள்.

“என் மகனே! என் திருநீறு மார்புக்கு வரலாம், வாய்க்கு வரலாம், மேலே நெற்றிக்கு மட்டும் வரக்கூடாதோ.. என்று கேலியாகக் கேட்டுவிட்டு, என்னிடம் வந்த பிறகு இதிலெல்லாம் ஒன்றுமில்லை மகனே!” என்று சொல்லிய பிற்பாடுதான் நெற்றியில் திருநீறு பூச ஆரம்பித்தார்.

எது எப்படியோ..அடிகளார் நெற்றியில் திருநீறு பூசுவதற்கு அன்னை புலவர் சொக்கலிங்கத்தைத்தான் ஏவினாள்.

## அவன்! அவள்! அது! – முப்பொருள் தத்துவம்

இந்தப் படத்திற்குரிய விளக்கத்தைப் பிற்பாடு அன்னையே விளக்கினாள்.

மகனே! என்னை ஆணாக வழிபடுவோர் உண்டு, பெண்ணாக வழிபடுவோர் உண்டு. ஆணாகவும், பெண்ணாகவும் அல்லாமல் ஜோதியாக (அது) வழிபடுவோர் உண்டு.

**நான் ஆணாக இருக்கிறேன் என்பதை உணர்த்த அடிகளாரையும், பெண்ணாக இருக்கிறேன் என்பதை உணர்த்த கருவறைச் சிலையை வைத்திருக்கிறேன். அதுவாக (ஜோதி) இருக்கிறேன் என்பதை உணர்த்த சுயம்பாக இருக்கிறேன். அந்தப் படம் அவன்! அவள்! அது! என்ற முப்பொருள் தத்துவம் கொண்டதடா! என்றாள்.**

ஓம் சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

*ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!*



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

*ஆலய சிறப்பு விழாக்கள்*

## 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | 28 | 12.07.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 11 | 27.07.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 23 | 09.10.2018 | செவ்வாய் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| ஐப்பசி | 07 | 24.10.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 21 | 07.11.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 7 | 23.11.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |

### மன நோயாளி:

“சதா சிந்தனை, சதா பேச்சு, சதா செயல் என்றே ஒருவன் இருந்தால் அவன் மனநோயாளியாக மாறிவிட நேரும்.”

- அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – July 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 01.07.2018 | Sunday | ஆனி | 17 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 06.07.2018 | Friday | ஆனி | 22 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 08.07.2018 | Sunday | ஆனி | 24 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 13.07.2018 | Friday | ஆனி | 29 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 15.07.2018 | Sunday | ஆனி | 31 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 20.07.2018 | Friday | ஆடி | 04 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 22.07.2018 | Sunday | ஆடி | 06 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 27.07.2018 | Friday | ஆடி | 11 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |




| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 29.07.2018 | Sunday | ஆடி | 13 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**12.07.2018 – வியாழன் - அமாவாசை, 27.07.2018 – வெள்ளி - பௌர்ணமி**

# அன்னை நினைத்துவிட்டால் அது நடந்தே தீரும்

1998ஆம் ஆண்டிற்கு முன் மெய்யிற்கும் பொய்யிற்கும் வித்தியாசம் கண்டறியா எனக்கு அருள்திரு அடிகளார் அவர்களை அன்னையாய் ஏற்க மனம் வரவில்லை.

அன்னையை ஆராதிப்பவள் மனதில் அடிகளாருக்கு இடம் இல்லை. ஏற்கனவே கர்ப்பப்பையில் கோளாறு காரணமாக சென்னை அப்பலோ மருத்துவமனைக்குச் சென்று அங்கு பல பரிசோதனைகள் செய்யப்பட்டு கர்ப்பப்பை மிகவும் பலவீனமாய் உள்ளதென்றும் ஓவரி வேலை செய்யவில்லை என்றும் உங்களால் இன்னொரு குழந்தைக்கு (ஏற்கனவே இரு ஆண் குழந்தைகள் உள்ளனர்) தாயாக வாய்ப்பு இல்லை என்றும் கடின வேலைகள் செய்யக் கூடாதென்றும் மருத்துவச் சான்றிதழ் தரப்பட்டது.

நானும் நமக்கு இன்னும் ஓர் குழந்தை எதற்கு என்று அதைப் பெரிதுபடுத்தவில்லை. பல மாதங்களின் பின் எனக்கு மறுபடியும் உடல் நலக்கோளாறு ஏற்பட்டு இங்கு மிகப் பிரசித்தி பெற்ற மகப்பேறு மருத்துவர் ஒருவரிடம் சென்றேன். அவர் நன்கு பரிசோதனை செய்து பின் ஸ்கேன் செய்யச் சொன்னார். முடிவில் எனக்கு கர்ப்பப்பையில் கட்டி உண்டென்றும் 10 நாட்களுக்குள் அறுவைச் சிகிச்சையில் கர்ப்பப்பையே அகற்ற வேண்டும் எனவும் நான் மிகப் பலவீனமாக இருப்பதால் அதுவும் கடினம் எனவும் தெரிவித்தார்.

**சக்தி கோமதி கணேசன்**

இப்படிப்பட்ட நிலையில் என் குடும்பத்தாரே கலங்கித் தவித்தனர். அந்நிலையில் நான் செய்த புண்ணியம், என் மனதில் மேல்மருவத்தூருக்குச் செல்ல வேண்டும் என்று தோன்றியது. திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பது ஒரு திருவாக்கு. திக்குத் தெரியாத காட்டில் நின்ற எம்மைக் கை பிடித்து நம் பரம்பொருளான அருள்திரு குருவான ஒளியைக் காட்டியவர் சக்தி ஞானாம்பிகை நாகலிங்கம் அவர்கள். அவர்கள் ஆதரவோடு என் கணவருடன் மேல்மருவத்தூருக்குப் பயணமானேன்.

மேல்மருவத்தூர் சென்று அடுத்தநாள் அன்னையை வணங்கி அம்மாவுக்கு பாதபூசை செய்தோம். அப்போது நான் அம்மாவிடம் அம்மா எனக்கு கட்டி என்று தொடங்கினேன். அதற்கு அம்மா “உனக்கு பெண் குழந்தை ஒன்று தர எண்ணியுள்ளேன். அக்குழந்தை மண்ணில் விழும்வரை நீ படாதபாடு படுவாய். ஆனால் குழந்தை நன்றாய்ப் பிறக்கும்” என்றார்கள். நாமும் பாதபூசை முடிந்து இளைப்பாறும் அறைக்கு வந்துவிட்டோம்.

இளைப்பாறும் அறைக்கு வந்த பின் நான் என் கணவரிடம் பெரிய பெரிய மேதையான மருத்துவர் ஸ்கேன் எடுத்துப் பார்த்து கட்டி என்கிறார். இவர் என்ன பிள்ளை என்கிறார், என்னதான் செய்வது என்று நானும் குழம்பி என் கணவரையும் குழப்பினேன். அன்று அப்படியே கழிய அடுத்த நாள் சக்தி ஞானாம்பிகை அவர்கள் பாதபூசை செய்யச் சென்றதால் அவர்களுடன் நானும் சென்றேன். அங்கு சென்றதும் அம்மா என்னைப் புன்னகையுடன் நோக்கி “படம் போட்டுச் சொல்கிறான் கட்டி என கை காட்டி (ஆசிர்வாதத்தை) சொல்கிறானே பிள்ளை என எதை நம்புவது என நினைக்கிறாயா கலங்காதே குழந்தை பிறக்கும் வரை நீ படாதபாடு படுவாய் குழந்தை நலமாய் பிறக்கும்” என்றாள். அந்த நிமிடம் எனக்கு எப்படி இருந்திருக்கும். அனைத்துமறிந்தவளால் மட்டும்தானே இது முடியும். அப்படியானால் இங்கு அமர்ந்திருப்பவர் அன்னையேயன்றி வேறு யாராக இருக்க முடியும் என்ற மெய்ப்பொருள் விளங்கியது.

இதன்பின் இலங்கை வந்த நான் மறுநாள் காலையே மிகுந்த உதிரப்போக்கு காரணமாக (முதலில் பரிசோதனை செய்த வைத்தியர் அன்று விடுமுறை) வேறு ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். அவர்களும் எனக்கு D.N.C. (டி.என்.சி.) செய்ய வேண்டும் தலைமை மருத்துவர் வரட்டும் என்றார்கள். அவரும் வருகிறார் வருகிறார் என்கிறார்கள் வந்தபாடில்லை. மாலை 4.30 மணியளவில் அவர் தொலைபேசி மூலமாக இன்னொரு மருத்துவர் கொடுத்த சான்றிதல்களைப் பார்த்து இந்நோயாளிக்கு D.N.C. (டி.என்.சி.) செய்ய மாட்டேன். நாளைக்காலை நான் ஸ்கேன் எடுத்துப் பார்த்து முடிவு சொல்கிறேன் என்றார். மறுநாள் பரிசோதனை முடிவில் குழந்தை உருவாகியுள்ளது என்றும் மூன்று மாதக்கரு நன்றாக இருக்கிறது என்றும் நான் மிகவும் பலவீனமாக இருப்பதாகத் தெரிவித்தார். பத்து நாட்களுக்கு முன் கட்டியாய் இருந்த ஒன்று அன்னையால் குழந்தையாய் மாற்றப்பட்டதா? அந்நாளில் இருந்து அப்பெண் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை நான் நான் பட்டபாடு பெரும்பாடுதான்.(அம்மா அதைத்தான் முதலிலேயே சொன்னாளே).

ஓம் சக்தி!

## Melbourne - Mandrams – Upcoming Events – July 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**

Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 06.07.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.07.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

### Lalor

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)

May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியைப் பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2018

| | | | | |
|---|---|---|---|---|
| 01.07.2018 | ஞாயிறு | ஆனி | 17 | **சங்கடஹர சதுர்த்தி** |
| 04.07.2018 | புதன் | ஆனி | 20 | **ஷஷ்டி விரதம்** |
| 09.07.2018 | திங்கள் | ஆனி | 25 | **ஏகாதசி விரதம்** |
| 10.07.2018 | செவ்வாய் | ஆனி | 26 | பிரதோஷம் |
| 12.07.2018 | வியாழன் | ஆனி | 28 | **அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 16.07.2018 | திங்கள் | ஆனி | 32 | **சதுர்த்தி விரதம்** |
| 17.07.2018 | செவ்வாய் | ஆடி | 01 | 1ஆம் ஆடிச் செவ்வாய் |
| 18.07.2018 | புதன் | ஆடி | 02 | **ஷஷ்டி விரதம்** |
| 23.07.2018 | திங்கள் | ஆடி | 07 | **ஏகாதசி விரதம்** |
| 24.07.2018 | செவ்வாய் | ஆடி | 08 | 2ஆம் ஆடிச் செவ்வாய் |
| 25.07.2018 | புதன் | ஆடி | 09 | பிரதோஷம் |
| 27.07.2018 | வெள்ளி | ஆடி | 11 | **குரு பௌர்ணமி – குரு பூர்ணிமா**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>**பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 31.07.2018 | செவ்வாய் | ஆடி | 08 | 3ஆம் ஆடிச் செவ்வாய்<br>சங்கடஹர சதுர்த்தி |
| 03.08.2018 | வெள்ளி | ஆடி | 18 | **ஷஷ்டி விரதம்** |
| 07.08.2018 | செவ்வாய் | ஆடி | 22 | 4ஆம் ஆடிச் செவ்வாய் |
| 11.08.2018 | வெள்ளி | ஆடி | 25 | **ஆடி அமாவாசை விரதம் -<br>அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 12.08.2018<br>13.08.2018 | ஞாயிறு<br>திங்கள் | ஆடி | 27<br>28 | **மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்<br>47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| 14.08.2018 | செவ்வாய் | ஆடி | 29 | நாகசதுர்த்தி விரதம்<br>5ஆம் ஆடிச் செவ்வாய் |
| 15.08.2018 | புதன் | ஆடி | 30 | நாக பஞ்சமி – கருட பஞ்சமி |
| 16.08.2018 | வியாழன் | ஆடி | 31 | ஷஷ்டி விரதம்<br>கொடியேற்றம் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 24.08.2018 | வெள்ளி | ஆவணி | 08 | வரலக்ஷ்மி விரதம் - ஆவணி ஓணம் |
| 02.09.2018 | ஞாயிறு | ஆவணி | 17 | கிருஷ்ண ஜெயந்தி – கோகுலாஷ்டமி |
| 08.09.2018 | சனி | ஆவணி | 23 | தேர் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 13.09.2018 | வியாழன் | ஆவணி | 28 | **விநாயகர் சதுர்த்தி** |
| 24.09.2018 | திங்கள் | புரட்டாசி | 08 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 28.09.2018 | வெள்ளி | புரட்டாசி | 12 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 09.10.2018 | செவ்வாய் | புரட்டாசி | 23 | நவராத்திரி ஆரம்பம் |
| 18.10.2018 | வியாழன் | ஐப்பசி | 01 | சரஸ்வதி பூஜை - ஆயுத பூஜை |
| 19.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 02 | விஜயதசமி |
| 24.10.2018 | புதன் | ஐப்பசி | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 26.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 09 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |